நிதிக்கூற்றுக்களானவை குறிப்பிட்ட குறிப்புகளின் கீழ் நியாயப் பெறுமதி தொடர்பான பொருத்தமான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள சந்தர்ப்பங்களை தவிர்த்து, வரலாற்றுக் கிரயத்தினை அடிப்படையாக கொண்டு அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

காணி மற்றும் கட்டிடங்கள் விலை மதிப்பீட்டு திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், வாகனங்கள் 2014 ஆம் ஆண்டின் போது மீள்மதிப்பிடப்பட்டிருந்தன. ரூபா 1,899,262.00 பெறுமதியான வாசிகசாலைப் புத்தகங்கள் 2014 ஆம் ஆண்டின் கணக்குகளில் எடுக்கப்பட்டிருந்தன.

2.4 பெறுமானத்தேய்வு

கொள்வனவு செய்த ஆண்டு முதல் பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிறுவகத்தால் பொதுவாகப் பயன்படுத்தப்பட்ட வருடாந்த பெறுமானத்தேய்வு விகிதம் பின்வருமாறாகும்.

	வருடம் ஒன்றிற்கு
கட்டிடங்கள்	10மூ
வாகனங்கள்	25மூ
இயந்திரம்	12.5மூ
தளபாடமும் பொருத்துக்களும்	10மூ
அலுவலக உபகரணங்கள்	25மூ
இதர உபகரணங்கள்	25மூ
வாசிகசாலை புத்தகம்	25மூ

சாதாரண செயற்பாட்டு சுழற்சியின் போது காசிற்காக மாற்றப்பட வேண்மென.். அல்லது ஐந்தொகைத் திகதியிலிருந்து ஒரு ஆண்டிற்குள் இவற்றில் எது குறுகியதோ அக்காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டவை ஐந்தொகைகளில் நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், இருப்புக்கள் முதல் வந்தது முதல் செல்லல் முறையில் பெறுமதியிடப்படுகின்றன.

2.5 வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்கள்

வெளிநாட்டு நாணய மாற்றலில் ஈடுபடுகின்ற சகல கொடுக்கல் வாங்கல்களுக்கும் இந்த நிதிக்கூற்றில் உள்ள கொடுக்கல் வாங்கல் நேரத்தில் நடைமுறையில் நிலவும் நாணயமாற்று வீதத்தில் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்டுள்ளன.

2.6 ஐந்தொகைக்கு பின்னர் ஏற்படுகின்ற நிகழ்வுகள்

ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் ஏற்படுகின்ற நிகழ்வுகளின் சகல பொருண்மையான விடயங்களும் நிதிக்கூற்றின் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

3. பொறுப்புக்களும் ஏற்பாடுகளும்

3.1 நிதிக்கூற்று தயாரிக்கின்ற நேரத்தில் கண்டறியப்பட்ட சகல பொறுப்புக்களும் கணக்கிடப்பட்டிருந்ததுடன் இருப்பதாக காணப்பட்ட பொறுப்புக்களுக்காகவும் போதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

3.2 ஓய்வூதியப் பணிக்கொடை

1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச் சட்டத்தின் கீழ் கொடுப்பனவிற்காகவிருந்த முழு ஓய்வூதியப் பணிக்கொடைக்காகவும் மற்றும் 1994 இன் 21 ஆம் இலக்க ளுடுவுடீ மண்டல சட்டவாக்கம் மூலம் ஆரம்பிக்கப்பட்ட (28.12.1990) மக்கள்மயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் காலப்பகுதியில் சேவையாற்றிய சேவையாளி ஒவ்வொருவரும் சேவைக்காலம் முழு வருடங்களுக்கமாக வருடத்திற்கு 2 கிழமைக்கான ஊதியம் பணிக்கொடை கொடுப்பனவாக 28.12.1990 முதல் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

3.3 பிற்போட்ட வருமானம்

திறைசேரி நிதியங்களின் கீழ் பெறப்பட்ட மூலதன மானியம் பிற்போட்ட வருமானமாகக் கருதப்பட்டு தலா ஒரு வருடத்திற்கு 10மூ காலக்கழிவிடப்பட்டுள்ளன.

3.4. ஊழியர் செமலாப நிதி கொடுப்பனவு

நிறுவனம் 12மூ பங்களிப்பும் இ.ஜே.தொ.ப.நி. உள்வாங்கிய ஊழியர்கள் 8மூ பங்களிப்பும் 10மூ இ.போ.சு. உள்வாங்கிய ஊழியர்களுமாக பங்களிப்புச்செய்யப்படுகிறது

தலைவர்

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்தின் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்று மற்றும் ஏனைய சட்ட பூர்வ மற்றும் ஒழுங்கமைத்தல செயற்பாடுகள் ஆகியன தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது சரத்தின் பிரகாரம் கணக்காய்வு அத்தியட்சகரின் அறிக்கை

1. நிதி அறிக்கை

1.1 கருத்தினை தெரிவித்தல்

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்தின் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிய நிதி நிலை கூற்று மற்றும் அத் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயற்றிறன் அறிக்கை, உரிமை மாற்ற வெளியீடு மற்றும் அத் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதி ஓட்ட அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுகளுடன் தொடர்புடைய குறிப்புகள், சாரம்சப்படுத்தப்பட்ட முக்கிய கணக்கீட்டு கொள்கைகளுடன் கூடிய 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்று, இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு சட்டமூலத்தின் 154 (1) சட்டமூலத்துடன் இணைத்து கூறப்படவேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமூலம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி சட்டமூல ஏற்பாடு என்பவற்றிற்கு அமைவாக எனது கட்டளையின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசியலமைப்பு சட்டமூலம் 154 (6) சட்டமூலத்திற்கு இணங்க எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிறுவகத்தின் நிதிக்கூற்று தொடர்பாக நான் கருத்தொன்றினை தெரிவிக்கவில்லை. கருத்தினைத் தெரிவிக்கும் பொருட்டு அடிப்படையான பகுதியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந் நிதிக்கூற்று தொடர்பான கணக்காய்வொன்றின் அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் தகுதி மிக்க கணக்காய்வு சாட்சிகளைப் பெற்றுக்கொள்வதற்கு எனக்கு முடியாமற்போயுள்ளது.

1.2 கருத்தினை தெரிவிப்பதற்கான அடிப்படை

(அ) வருடாந்தம் நிறுவகத்தின் நிதிச் செயற்றிறன் அறிக்கையில் காட்டப்படும் தேறிய நிதி மேலதிகம் அல்லது குறைபாட்டுடன் கூடிய நிதி நிலைமை கூற்றில் திரட்டு மேலதிகம் அல்லது குறைபாடொன்றாக வேறாக காட்டுவதற்குப் பதிலாக மொழிபெயர்ப்பு ஒதுக்கீடு (வுசயளெடயவழைெ சுநளநசஎந) ஒன்றாக பிழையான முறையில் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) (ை) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 2 இற்கு இணங்க நிதி ஓட்டக் கூற்றினைத் தயாரிக்கும் போது மீளாய்வாண்டிற்குரியதாக கணக்கீடு செய்யப்பட்ட வட்டி வருமானமான ரூபா 4,044,048 இயக்குதல் இலாபத்துடன் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ை) மீளவும் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,366,540 பெறுமதியானது வட்டி வருமான நிதி ஓட்டமொன்றாகவும் மற்றும் ரூபா 13,660,221 பெறுமதியானது காலத்திற்குரிய வைப்பினை மீளப்பெறல் நிதியோட்டமொன்றாகவும் நிதி ஓட்டக்கூற்றில் தனித்தனியாகக் காட்டப்படுவதற்குப் பதிலாக நிகர பெறுமதியான ரூபா 10,293,681 ஆகக் காட்டப்பட்டிருந்தது.

(ஜை) ரூபா 3,975,757 மொத்தப் பெறுமதியான குறுகிய கால வைப்பு, திறைசேரி கட்டளை மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் ஆகியன நிதி ஓட்டமொன்றாக காட்டப்பட்டிருக்காததுடன் செயற்பாட்டு மூலதன மாற்றத்தின் கீழ் ரூபா 68,291 பெறுமதியான கிடைக்கப்பெற வேண்டிய வட்டி வருமானத்திற்குரிய வேறுபாடானது சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஸை) வருடத்தில் நன்கொடையாகக் கிடைக்கப் பெற்ற ரூபா 8,866,070 பெறுமதியான சொத்தானது நிதி ஓட்ட கூற்றில் முதலீட்டு செயற்பாட்டின் கீழ் சொத்தினைக் கையகப்படுத்தலாகவும் மற்றும் நிதிச் செயற்பாட்டின் கீழ் பிரதானமாக மூலதனமாக பிழையான முறையில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆவது சரத்திற்கு இணங்க, நிலையான சொத்துக்களுக்கான பயனுள்ள ஆயட் காலத்தினை வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக தற்போதைய வருட இறுதியில் மொத்தமாக தேய்வடைந்துள்ள ரூபா 41,437,189 பெறுமதியான சொத்துகள் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் இன்னமும் பயன்பாட்டில் உள்ளன. அதற்கிணங்க ஏற்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட பிழையினை இலங்கை அரச துறைசார் கணக்காய்வு நியமம் 3 இற்கு இணங்க மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், இங்கு மொத்த தாங்கு பெறுமதியானது நிதிக் கூற்றில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதி நிலைமைக் கூற்றில் நிகர சொத்துகள்∴ திணிவுகளின் கீழ் தஜரட்டு நிதியமாக ரூபா 844,875,725 மற்றும் முதலீட்டு ஒதுக்கீடாக ரூபா 4,407,578 வரையில் காணப்பட்டதுடன் இலங்கை அரச பிரிவு கணக்கீட்டு நியமம் 1 இன் 95 ஆவது சரத்திற்கு இணங்க அவ் ஒதுக்கீட்டின் தன்மை மற்றும் நோக்கம் ஆகியன நிதிக் கூற்றுகளில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமம் 9 இன் 15 ஆவது சரத்திற்கு இணங்க இருப்பினை மதிப்பீடு செய்ய வேண்டியது செலவினம் அல்லது பணமாக மாற்றமடையும் பெறுமதி ஆகிய இரண்டிலும் குறைந்த பெறுமதியினாலாகும் ஆயினும் நிறுவகத்தினால் இருப்பினை மதிப்பீடு செய்கையில் செலவினத்தின் மீது இருப்பு பெறுமதி செய்யப்பட்டிருந்தது.

(உ) ரூபா 734,130,951 பெறுமதியினையுடைய 238 நாளேடுகளை முறையான அனுமதியுடன் கணக்காய்வின் பொருட்டு சமர்ப்பிக்கவில்லை. அவ்வாறே 14,470,197 பெறுமதியான கடன்படுநர் மற்றும் கடன் கொடுநர் மற்றும் உதிர்ப்பாக இருப்புக்குரிய மீதியினை உறுதி செய்தல் மற்றும் இருப்பு சரிசெய்தல் அறிக்கை ஆகியவற்றினை கணக்காய்வின் நிமித்தம் சமர்ப்பிக்காமையினால் அவை சரியானவை என உறுதி செய்வதற்கு முடியாமற் போயுள்ளது.

1.1 நிதிக் கூற்றினை முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் செய்யும் தரப்பினரின் பொறுப்புகள்

இந் நிதிக் கூற்றினை இலங்கை அரச துறைசார் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் சாதாரணமான முறையில் சமர்ப்பித்தல் மற்றும் ஊழல்கள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய போதியளவான பிழையான வெளிப்படுத்தல்கள் அற்ற முறையில் ஏதுவான அவசிய உள்ளக நிர்வாகத்தினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றினை தயாரிக்கும் போது, ஆணைக்குழுவினை தொடர்ச்சியாக நடாத்திச் செல்லக்கூடிய ஆற்றல் தீர்மானிக்கப்படுவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் என்பதுடன் முகாமைத்துவம் ஆணைக்குழுவினை பிழையாக வழிநடத்த விரும்புதல் அல்லது வேறு மாற்றுவழியற்ற போது செயற்பாட்டினை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் என்பன நீங்கலாக தொடர்ச்சியாக செயற்படும் அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் ஆணைக்குழுவின் தொடர்ச்சியான செயற்பாட்டிற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயற்பாடு தொடர்பான பொறுப்புகள், நிர்வாகம் செய்யும் தரப்பினரால் வகிக்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டமூலத்தின் 16 (1) உப பிரிவிற்கு இணங்க நிறுவகதின் வருடாந்த மற்றும் காலத்திற்கு காலம் வெளிப்படுத்தப்படும் நிதிக்கூற்றுகளைத் தயாரிப்பதற்கு ஏற்ற வகையில் சொந்த வருமானம், செலவினம், சொத்துகள் மற்றும் பொறுப்புகள் என்பவை தொடர்பான சரியான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும்.

1.4 நிதிக் கூற்று கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புகள்

இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படும் கணக்காய்வுகளின் அடிப்படையில் நிறுவகத்தின் நிதிக்கூற்று தொடர்பான கணக்காய்வாளரின் அறிக்கையினை வெளிப்படுத்தல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், கருத்தினை தெரிவிப்பதற்காக அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந் நிதிக் கூற்று தொடர்பான கணக்காய்வு கருத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவான மற்றும் தகுதியான கணக்காய்வு சாட்சிகளைப் பெற்றுக்கொள்வதற்கு எனக்கு முடியாமற் போயுள்ளது.

2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்கமைத்தல் தேவைபாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளிற்கிணங்க, கணக்காய்விற்கான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்பவற்றினைப் பெற்றுக்கொள்வதற்கு எனக்கு முடியாமற் போயுள்ளதுடன் எனது ஆய்வில் வெளிப்படுகின்ற வகையில் உரிய நிதி அறிக்கையினை நிறுவகமானது பேணியுள்ளது என்பதனை உறுதி செய்வதற்கு எனக்கு முடியாமற் போயுள்ளது.
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (ை) இ (ைை) சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு இணங்க நிறுவகத்தினால் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்று முன்னைய வருடத்துடன் ஒத்துப்போகின்றது.
- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (ை) இ (ைை) சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு இணங்க கடந்த வருடத்தில் என்னால் முன்வைக்கப்பட்ட சிபார்சுகள் முன்வைக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சட்டம் மற்றும் ஒழுங்கமைத்தலிற்கு அமைவாக	இணங்காமை
(அ) 2017 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவக சட்டம்	
(ை) 12 (1) சரத்து	சபைக் கூட்டங்கள் அனுமதிக்கப்பட்ட ஆளணியுடன் மாதத்திற்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டும் என்பதுடன் சபையின் ஒரு கூட்டத்தில் பங்குபற்ற வேண்டிய நபர்களின் எண்ணிக்கை ஐந்து ஆகும். எவ்வாறாயினும் மே மாதம் 31 ஆம் திகதியாகும் போது பணிப்பாளர் சபையிற்கு 07 பேர் நியமிக்கப்பட்டு இருந்த போதிலும் 2020 அக்டோபர் 20 ஆம் திகதி வரையில் பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. நிறுவகத்தினால் இறுதியாக 2018 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதியன்று கூட்டமானது நடாத்தப்பட்டுள்ளதுடன் உரிய காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த முக்கிய முகாமைத்துவ முடிவுகளை மேற்கொள்ளமுடியாமற் போயுள்ளது. மேலும் அக் காரணத்தினால் 2019 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் கூட்டத்தினையும் நடாத்துவதற்கு முடியாமற் போயுள்ளது.

17 (5) சரத்து	பணிப்பாளர்.˙. அதிபர் பதவி தொடர்பாக பதவி வெற்றிடம் காணப்படுமாயின் (1) உப சரத்தின் ஏற்பாட்டின் கீழ் நிரந்தர நியமனத்தினை மேற்கொள்ளும் வரையில் பணிப்பாளர்.˙. அதிபர் பதவிக்கான செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக சபையின் மூலம் சபையின் அங்கத்தவர் ஒருவரை தேர்ந்தெடுக்க முடியும் என்பதுடன் 2019 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆம் திகதி தொடக்கம் ஓய்வு பெற்ற நிறுவகத்தின் பணிப்பாளர்.˙. அதிபர் அவர்கள் 2019 மே மாதம் 29 ஆம் திகதியிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் நியமனம் செய்யப்பட்டிருந்தார்
(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குமுறை வெளியீட்டின் நிதி ஒழுங்குமுறை 1646	அறிக்கை முன்வைக்கப்படும் மாதத்தின் பின்னர் எதிர்வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் அவ்வவ் மாதங்களின் நாளாந்த ஓட்ட அறிக்கைகளை கணக்காய்வு அத்தியட்சகரிடம் சமர்ப்பிக்க வேண்டியுள்ளதுடன் ஆரம்பத்திலிருந்து நிறுவகத்தினால் அதற்கிணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.
(இ) 2016 ஆம் ஆண்டின் டிசெம்பர் மாதம் 29 ஆம் திகதிய 30.˙.2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் சரத்து 3.1	ஓவ்வொரு எரிபொருள் பரிசோதனையின் பின்னரும் 12 மாத காலப்பகுதியின் பின்னர் அல்லது 25000 கி.மீ தூரத்தினை ஓடிய பின்னர் அல்லது என்ஜினுடன் தொடர்புடைய பிரதான பழுதுபார்த்தலின் பின்னர் போன்ற விடயங்களில் முதலில் நிகழும் சந்தரப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனையினை மேற்கொள்ள வேண்டிய போதிலும் நிறுவகத்தினால் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(ஈ) 2000 ஆம் ஆண்டு யூன் 27 ஆம் திகதிய පිළිළපී/ පීඊ/ 9 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை	அரச நிறுவகமொன்றில் மேலதிக நிதியானது திறைசேரியின் பூரண அனுமதியினை பெற்றுக்கொள்ளாமல் நிலையான வைப்பு, காலத்திற்குரிய வைப்பு அல்லது திறைசேரி கட்டளைகளில் முதலீடு செய்யப்பட முடியாது என்பதுடன் அவ்வாறு அனுமதியானது பெற்றுக்கொள்ளப்படாமல் நிறுவகத்தினால் நிலையான வைப்பாக ரூபா 24,836,310 ம் திறைசேரி கட்டளையாக 10,788,555 ம் மொத்தமாக ரூபா 35,624,865 முதலீடு செய்யப்பட்டிருந்தது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு இணங்க நிறுவகத்தின் அதிகாரம், பணி மற்றும் செயற்பாடுகளிற்கு இணங்காமல் செயற்பட்டுள்ளமை

அதிகாரம், பணி மற்றும் செயற்பாடுகள்	அவதானிப்புகள்
2017 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவக சட்டமூலத்தின் 4 (ஏ) சரத்து	குறித்த துறைசார் தொழில்நுட்ப மற்றும் தொழிற்பயிற்சி வழங்கல்களை றடாத்துதல் மற்றும் கல்வியினை கற்பித்தல் ஆகியவை தொடர்பாக பிராந்திய மத்திய நிலையங்களை ஸ்தாபித்தல் நிறுவகத்தின் பணியாக காணப்படுகின்ற போதிலும் அதற்காக செயற்படுவதற்கு நிறுவகத்தினால் எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு இணங்க கீழே தரப்பட்டுள்ள அவதானிப்புகள் தவிர நிறுவகத்தின் வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் மற்றும் செயற்றிறன் மிக்கதாகவும் காலப்பகுதிகளினுள் சட்டபூர்வமாக கொள்வனவு செய்து பயன்படுத்தாமை

(அ) 2018 ஆம் ஆண்டில் 3,586,990 இனை செலவு செய்து சேவை கணனி மற்றும் புதிய கணனி வலையமைப்பு ஆகியவற்றினை ஸ்தாபிப்பதற்குரிய ஏனைய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் 2019 செப்ரெம்பர் மாதமளவில் எதிர்பார்க்கப்பட்ட பிரதான செயற்பாடுகளில் கணனி வலையமைப்பினை ஸ்தாபிக்காமல் வலையமைப்பு வசதிகளை வழங்குதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஆ) அரச கொள்வனவு வழிகாட்டல் வெளியீடு – 2006 இன் 2.9.1 வழிகாட்டல் தொடர்பாக அரச நிதி திணைக்களத்தின் மூலம் 2017 மார்ச் 01 ஆம் திகதியன்று முன்வைக்கப்பட்ட 32 ஆவது இணைப்பிற்கு இணங்க கொள்வனவு செயற்பாடுகள் சந்தை விலை கோரல் முறையின் கீழ் அல்லது நேரடி ஒப்பந்த முறையின் கீழ் மேற்கொள்ளும் போது கொள்வனவு கூட்டங்களில் பங்குபற்றுதலின் பொருட்டு அலுவலர்களுக்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளை சம்பந்தப்படுத்தக்கூடாது என்பதுடன் எந்தவொரு கொடுப்பனவினையும் மேற்கொள்ளக்கூடாது. அதற்கு முரணாக சந்தை விலைக் கோரல் முறையின் கீழ் 5 கொள்வனவுகளுக்குரிய குழு உறுப்பினர்களுக்கும் மற்றும் ஏனைய அலுவலர்களுக்கும் 2017 மற்றும் 2018 ஆகிய வருடங்களில் மொத்தமாக ரூபா 35,250 செலுத்தப்பட்டுள்ளது.

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

(அ) நிறுவகத்தினால் நிதி அறவிடப்படும் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட 11 பகுதிநேர பாடநெறிகள் மூலம் கிடைக்கப்பெற்ற ரூபா 3,292,300 வருமானத்திற்கு இணையாக கற்பித்தல் கட்டணம், பயிற்சி பொருட்கள் மற்றும் ஏனைய செலவினங்களாக ரூபா 3,345,398 செலவு செய்யப்பட்டமையினால் அப் பாடநெறிகள் மூலம் ரூபா 162,098 நஷ்டமானது ஏற்பட்டுள்ளது. இது தொர்டர்பாக கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்விற்கு இணங்க 08 மாலை நேர வகுப்புகள் தொடர்பாக 4 தொடக்கம் 10 பயிலுநர்களைக் கொண்ட குழுக்களுக்கு பாடநெறிகள் நடாத்தப்பட்டுள்ளதுடன் பாடநெறிகளுக்குரிய இலாக இருகூறாக்கல் இலட்சணங்களை கண்டறிந்து சிறு குழு, அடுத்த குழு போன்றவற்றினை ஒன்றிணைப்பது தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வு வருடம் மற்றும் கடந்த ஐந்து வருடங்களில் முழு நேர பாடநெறிகள் தொடர்பாக அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளில் 20 தொடக்கம் 30 சதவீதமானவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளதுடன் வருடாந்தம் அதிகரிக்கும் கேள்விகளுக்கு ஏற்றவாறு நிறுவகத்தின் கொள்ளளவினை அதிகரிப்பதற்கு உரிய திட்டமிடலுடன் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததுடன் மீளாய்வாண்டில் மாத்திரம் 3075 விண்ணப்பதாரிகளுக்கு பாடநெறிகளை கற்பதற்கான சந்தர்ப்பங்கள் கிடைக்காமற் போயுள்ளது.

(இ) முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இல 30 இற்கு இணங்க 2006 ஜனவரி 01 ஆம் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட சம்பள படிநிலைகளுக்கு அமைவாக முகாமைத்துவ சேவை பணிப்பாளர் நாயகம் அவர்களின் 2008 செப்ரெம்பர் 29 ஆம் திகதிய னுஆளு.்.ஊ.்.1.்ளு.்.34 ஆம் இலக்க கடிதத்தின் இரண்டாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு முரணாக முன்னர் உழைக்கப்பட்ட சம்பள அதிகரிப்பினை மீண்டும் வழங்கி 2008 யூலை 01 ஆம் திகதியன்று செய்யப்பட்ட உள்வாங்கல் ஊழியர்களுக்குரிய உள்ளக கணக்காய்வுகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட மாதிரி பரீட்சையின் போது அவதானிக்கப்பட்டுள்ளது. இங்கு உள்வாங்கல் மேற்கொள்ளும் போது சம்பள அதிகரிப்பு 01 தொடக்கம் 16 வரையில் கூடுதலாக வழங்கப்பட்டிருப்பதன் காரணமாக அவ் ஊழியர்களுக்கு 2016 ஜனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2018 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையில் மொத்தமாக ரூபா 1,504,100 கூடுதலாக வழங்கப்பட்டிருப்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது. பிழையான ஊழியர்கள் உள்வாங்கப்படுவதனை சரி செய்வதற்கு 2019 அக்டோபர் 30 ஆம் திகதி வரையில் இயலாமற் போயுள்ளது.

(ஈ) துறைசார் திறன்கள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பயிற்றுநர்களுக்கான படிகளை செலுத்தும் போது 2017 மார்ச் 23 ஆம் திகதிய 6.்.39.்.1.்.1 ஆம் இலக்க திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் செயலாளர் அவர்களின் கடிதத்துடன் முன்வைக்கப்பட்ட படி தொடர்பான மாதிரி படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 03 நிபந்தனைகளுக்கு முரணாக விளங்கி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது 2018 பெப்ரவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையிலான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பரீட்சைகளில் அவதானிக்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த வருட கணக்காய்வு அத்தியட்சகர் அவர்களின் அறிக்கையின் 4.3 (அ) சரத்து மூலம் இது தொடர்பான அவதானிப்புகளை முன்வைக்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டில் உரிய சரிசெய்தல்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய காணியில் நிறுவகத்திற்காக 06 மாடிகளைக் கொண்ட மாணவர் விடுதியினை நிர்மாணிக்கும் செயற்பாடு 2018 நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் 2019 செப்ரெம்பர் 30 ஆம் திகதியாகும் போது உரிய கட்டிடத்தின் திட்டத்திற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கு இயலாமற் போயுள்ளது. மேலும் இக் காணியின் சட்டபூர்வமான உரிமையினை இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஊ) 2018 டிசெம்பர் 31 ஆம் திகதியாகும் போது உயர் முகாமைத்துவ மட்ட பதவிகளில் 04 பதவிகள் அடங்கலாக 30 பதவிகள் தொடர்பாக வெற்றிடங்கள் நிலவியதுடன் 2020 யூன் 10 ஆம் திகதியாகும் போது அவ் உயர் முகாமைத்துவ மட்ட பதவிகள் அங்கலாக 23 பதவிகள் தொடர்பாக வெற்றிடங்கள் நிலவியது. அதற்கிணங்க இந் நிலைமையானது நிறுவகத்தின் செயற்பாடுகளை வெற்றிகரமாக கொண்டு செல்வதற்கு பெரும் இடையூறாக விளங்கியமை அவதானிக்கப்பட்டுள்ளது.

(எ) ஐக்கிய நாடுகள் அமைப்பின் மூலம் 2030 ஆம் ஆண்டாகும் போது அந்த அமைப்புக்குரிய அனைத்து நாடுகளினதும் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக அபிவிருத்தி மற்றும் சூழற் பாதுகாப்புத் திட்டங்கள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு ‘‘நீண்ட கால அபிவிருத்தி நிகழ்ச்சிநிரல் - 2030’’ ஆனது அறிமுகம் செய்யப்பட்டு உறுப்பு நாடுகள் மூலம் அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டியுள்ளது. அதற்கிணங்க இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்தின் மூலம் இந் நிகழ்ச்சிநிரலுக்கு இணங்க நிறுவகத்திற்குப் பொருத்தமானதாக இணைப்பு 04 இல் கண்டறியப்பட்டுள்ள போதிலும் அவற்றில் மூன்று நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவின் மூலம் 2018 ஜனவரி 01 ஆம் திகதியிலிருந்து 2019 யூன் 30 ஆம் திகதி வரையில் 11 உள்ளக கணக்காய்வு வினாக்கள் முகாமைத்துவத்திடம் சமர்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 யூன் 10 ஆம் திகதி வரையில் 04 கணக்காய்வு வினாக்கள் தொடர்பான பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்தின் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிற்கான வருடாந்த செயற்றிறன் அறிக்கையானது 2019 அக்டோபர் 24 ஆம் திகதி வரையில் பாராளுமனற்றத்திற்கு சமர்ப்பிக்க முடியாமற் போயுள்ளது.

(ஒ) நிதிநிலைக் கூற்றில் 2018 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா 657,330.00 பெறுமதியான சந்தேகத்திற்கிடமான கடனினை ஒதுக்கிய பின்னர் 2,746,816.00 மொத்த கடன் மீதியானது காணப்பட்டதுடன் அதில் 10 வருடங்களுக்கு முற்பட்ட ரூபா 428,205.00 பெறுமதியான கடன் மீதி மற்றும் 5 தொடக்கம் 10 வருடங்கள் வரையிலான ரூபா 1,097,929.00 பெறுமதியான கடன் மீதி ஆகியன காணப்பட்டதுடன் அவற்றினை அறவிடுவதற்காக முகாமைத்துவத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஓ) நிதிக் கூற்றில் உள்ளடங்கியுள்ள உதிரிப்பாகங்களில் ரூபா 432,252.00 மொத்த பெறுமதியான 135 உதிரிப்பாகங்களுக்கான 11,594 அலகுகள் 03 தொடக்கம் 20 இற்கும் மேற்பட்ட காலப்பகுதியில் விநியோகிக்கப்படாமல் களஞ்சியத்தில் காணப்பட்டுள்ளது.

(∴) நீண்ட காலமாக இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகமானது காணப்பட்ட 1,149,350,000.00 பெறுமதியான காணியின் உரிமையினைப் பெற்றுக்கொள்வதற்கு முகாமைத்துவமானது கவனத்தினை செலுத்தவில்லை.

டபில்யூ.பீ.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வு அத்தியட்சகர்

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்தில் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்று மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்கமைத்தல் பற்றிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆவது சரத்தின் பிரகாரமான கணக்காய்வு அத்தியட்சகரின் அறிக்கை

1. நிதிக்கூற்று

1.1 கருத்தினை வெளிப்படுத்தல்

1.2 கருத்தினை வெளிப்படுத்துதல் தொடர்பான அடிப்படை

(அ) 2019 ஆம் ஆண்டின் வருடாந்த கணக்கீட்டினைத் தயாரிக்கும் போது இத் தவறானது சரிசெய்யப்பட்டு இ. அ. நி. க. கூ. 01 இல் கூறப்பட்டுள்ளவாறு திரட்டு மேலதிகம்∴ குறைபாடகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) (ை) 2019 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த கணக்கீட்டினைத் தயாரிக்கும் போது இத் தவறு சரிசெய்யப்பட்டுள்ளது.

(ை) 2020 ஆம் ஆண்டிலிருந்து வருடாந்த கணக்கீட்டினைத் தயாரிக்கும் போது இத் தவறு சரிசெய்யப்பட்டுள்ளது.

(ைை) 2020 ஆம் ஆண்டிலிருந்து இத் தவறு சரிசெய்யப்பட்டுள்ளது.

(ை) 2020 ஆம் ஆண்டிலிருந்து இத் தவறு சரிசெய்யப்பட்டுள்ளது.

(இ) நிறுவகத்தின் சொத்தினை வெளிப்படுத்தும் பொருட்டு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நாட்டில் நிலவிய கோவிட் 19 நிலைமை காரணமாக நிறுவகத்தினால் திட்டமிடப்பட்டிருந்த செயற்பாடுகளை உரிய முறையில் நிறைவு செய்யமுடியாமற் போயுள்ளது. அவ்வாறே, பெருந்தொகையான பயிற்சி உபகரணங்கள் மற்றும் இயந்திர மற்றும் உபகரணங்கள் நிறுவகத்தில் காணப்படுவதனால் இச் செயற்பாட்டினை நிறைவு செய்வதற்கு கூடுதல் காலம் செலவாகும். மீள் மதிப்பீட்டு செயற்பாட்டினை முடிந்தளவு விரைவில் நிறைவுசெய்வதற்கு உரிய அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே, இச் செயற்பாட்டினை நிறைவு செய்து கணக்கீட்டில் முன்வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(ஈ) தரவுத்தளத்தின் இயல்பு மற்றும் நோக்கம் என்பவற்றினை நிதிக் கூற்றில் முன்வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(உ) மொத்த செலவினத்தினை அல்லது தேறிய கணக்கிற்கு சேர்ந்த பெறுமதியினை கணக்கிட்டு சரியான முறையில் 2020 ஆம் ஆண்டின் வருடாந்த கணக்கிற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

(ஊ) உரிய அனுமதியுடன் நாளேட்டு உறுதிச்சீட்டு கோவையினை தயார்செய்து கணக்காய்வின் நிமித்தம் முன்வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1.3 நிதிக் கூற்றினை முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் செய்யும் தரப்பினரின் பொறுப்புகள்

1.4 நிதிக் கூற்று கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

	சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக	இணங்கவில்லை
(அ)	2017 இல 15 இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவக சட்டம்	
	1.2 (ஈ) சரத்து	2019 ஆம் ஆண்டு பணிப்பாளர் சபையினை நியமிக்காமையினால் பணிப்பாளர் சபை கூட்டங்கள் நடாத்தப்படவில்லை
	(ஊ) 17 (5) சரத்து	பணிப்பாளர்.˙. அதிபர் 2019.05.24 ஆம் திகதியன்று ஓய்வு பெற்றதையடுத்து பணிப்பாளர் அதிபர் பதவி தொடர்பாக பொருத்தமான அலுவலர் ஒருவரை நியமனம் செய்வதற்கு காணப்பட்ட பிரச்சினைகளை கருத்திற்கொண்டு 2019.06.28 ஆம் திகதிய விஞ்ஞாபன இல 19.˙.1926.˙.115.˙.057 அமைச்சரவையின் அனுமதியற்கு இணங்க 2019.05.27 ஆம் திகதியிலிருந்து 06 மாத காலப்பகுதியிற்கு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டது. 2017 இல 15 இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவக சட்டமூலத்தின் (1) 17 மற்றும் (5) 17 ஆகிய சரத்துகளுக்கு அமைவாக பணிப்பாளர் அதிபர் பதவியிற்கு நிரந்தர நியமனமொன்றினை வழங்கும் வரையில் கடமைகளை மேற்கொள்ளும் பொருட்டு நிர்வாக சபை உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.
(ஆ)		தற்போது தொடர்ச்சியாக பல வருடங்கள் பயன்படுத்தக்கூடியதாக தயாரிக்கப்பட்டுள்ள 100 பக்கங்களைக் கொண்ட ஓட்ட அட்டவணை புத்தகங்களின் (ஏ 11) பிரதி அல்லது நிறைவுபெற்ற ஓட்ட அட்டவணை புத்தகங்களை முன்வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
(இ)		நிறுவகத்தின் ஆரம்பத்திலிருந்து இதுவரையில் ஓட்ட அறிக்கையில் (ஏ 11) எரிபொருளைப் பெற்றுக்கொள்வது பற்றி குறிப்பிடுவதுடன் எரிபொருளினைப் பெற்றுக்கொள்ளும் அனைத்து சந்தரப்பங்களிலும் எரிபொருள் தாங்கி முழுமையாக நிரப்பப்படும். ஆனால் இதுவரையில் சில ஊழியர் பேரூந்துகளில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கோவிட் 19 நிலைமை காரணமாக தற்காலிகமாக இப் பரிசோதனைகள் நிறுத்தப்பட்டதுடன் தற்போது இப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
(ஈ)	2000 யூன் 27 திகதி இல பீ.˙.எப்.˙.பிரீ.˙.09 இல அரச நிதி சுற்றறிக்கை	நிறுவகத்திற்குரிய முதலீடுகள் தொடர்பாக திறைசேரியின் அனுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது தொடர்பாக பதிலானது கிடைக்கப்பெறவில்லை. இம் முதலீடுகளை நிறுவகத்தின் உற்பத்தித் திறன் மிக்க செயற்பாடுகள் தொடர்பாக பிரயோகிப்பதற்கு பொது வியாபாரம் பற்றிய செயற்குழுவின் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே, அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தில் இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

அதற்கிணங்க, 2020.06.08 திகதிய நிர்வாகக் குழுவின் விஞ்ஞாபன இல 2020.᾽.04.᾽.01 இன் கீழ் ஊழியர் கடன் முன்மொழிவு முறை தொடர்பாக ரூபா 10 மில்லியன்களை ஒதுக்குவதற்கும், 2020.᾽.06.᾽.29 ஆம் திகதிய நிர்வாகக் குழுவின் விஞ்ஞாபன இல 2020.᾽.05.᾽.01 இன் கீழ் பொரளை கிளையினை அபிவிருத்தி செய்தல், உடல் வர்ணம் பூசுதல் பிரிவின் கட்டிடத்தின் குறைபாடுகளை நிவர்த்திசெய்தல், பணிப்பாளர் - அதிபர் உத்தியோகபூர்வ இல்லத்தினை புனருத்தாபனம் செய்தல், வகுப்பறைகளை அபிவிருத்தி செய்தல் போன்ற அலுவல்கள் தொடர்பாக அனுமதியானது பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. திட்டமிடப்பட்ட அலுவல்கள் பல இதுவரையில் மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளன. இல் அலுவல்கள் தொடர்பாக கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக அவசியமான வகையில் நிலையான வைப்பானது செல்லுபடியற்றதாக்கப்பட்டு ஏற்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கிணங்க, இச் செயற்பாடுகளின் நிமித்தம் ரூபா 18.69 மில்லியன்கள் நிலையான வைப்புகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எதிர்கால முதலீடுகளை பொருத்தமான முறையில் இச் செயற்பாடுகளின் நிமித்தம் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2018 இல 19 தேசிய கணக்காய்வு சட்டமூலத்தின் 12 (ஏ) சத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளிற்கு இணங்க நிறுவகத்தின் அதிகாரம், செயற்பணி மற்றும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை என

அதிகாரம், செயற்பணி மற்றும் செயற்பாடுகள்	அவதானிப்புகள்
	பொரளை மற்றும் ஆனமடுவ வலய மத்திய நிலையங்களை ஆரம்பித்து முச்சக்கர வண்டி பழுதுபார்த்தல் பாடநெறியினை நடாத்தி வருதல்
	ஆனமடுவ வலய மத்திய நிலையத்தினை ஆரம்பித்து அங்கு விவசாய இயந்திர கைவினைஞர் பாடநெறியினை நடாத்தி வருதல்

(அ) 2019 ஆம் ஆண்டின் இறுதியில் கணனி வலையமைப்பு ஸ்தாபிக்கப்பட்டு அதன் மூலம் நிறுவக ஊழியர்களின் சம்பளங்களைத் தயாரிப்பதற்கான நிறுவகத்தின் கணக்கீட்டு செயற்பாடுகள் தொடர்பான மென்பொருட் பக்கேஜ் கணக்கீட்டு தொகுதியானது ஸ்தாபிக்கப்பட்டு பேணப்பட்டு வருகின்றது.

(ஆ) சந்தை விலைகோரல் முறையிற்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கொள்வனவு செயற்பாடுகள் தொடர்பில் அலுவலர்களுக்கு கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்ட ரூபா 35,250.00 நிதித் தொகையானது மீண்டும் அறவீடு செய்யப்பட்டுள்ளது.

3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள

(அ) நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் மாணவ.ஃ மாணவிகள் தொழில்நுட்ப பாடநெறிகளைப் பயில்வதற்கு ஏற்ற விதத்தில் மிகவும் குறைந்த பாடநெறிக் கட்டணங்களின் கீழ் எமது நிறுவகத்தில் குறுகியகால பாடநெறிகள் நடாத்தப்படுவதோடு பாடநெறிகள் தொடர்பாக ஏற்படும் செலவினங்கள் கணக்கீடு செய்யப்பட்டு ஏற்படும் செலவினங்களை ஈடுசெய்யும் முகமாக இப் பாடநெறிக் கட்டணங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. மேலும், நிறுவகத்தில் பாடசாலை கல்வியினை இடைநடுவில் கைவிட்டோர் அல்லது பரீட்சைகளில் சித்தியடையாதோர் ஆகியோரை இலக்காகக் கொண்டு அவர்களின் எதிர்காலத்தினைக் கருத்திற்கொண்டு பிற்பகல் பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன. அதனால், இம் மாணவர்களின் எதிர்கால நலன்களை கருத்திற்கொண்டு சிறு குழுக்களுக்கு பாடநெறிகளை நடாத்துவதற்கான சந்தர்ப்பங்களை அளிக்கப்பட்டு வருவதுடன் அவ்வாறான சிறு குழுக்களை ஒன்றிணைப்பதாயின் பாடநெறிகளுக்கான செய்முறை வகுப்புகளை நடாத்தமுடியாமல் போய்விடும். எமது நிறுவகத்தினால் நடாத்தப்படும் அனைத்து பாடநெறிகளும் நிவாரண விலைகளின் கீழான சேவையொன்றாக நடாத்தப்படுவதுடன் இலாபத்தினை பெறும் நோக்கமின்றி மாணவர்களுக்கு நிவாரண விலைக்கு அதிகூடிய தரத்துடன் கூடிய உயர் மட்ட தொழில்நுட்ப அறிவினை வழங்குதல் எமது நிறுவகத்தின் பிரதான நோக்கமாகும்.

ஆ4 மற்றும் ஆ5 பாடநெறிகள் தொடர்பாக அணியொன்றில் காணப்பட வேண்டிய பயிலுநர்களின் எண்ணிக்கை 06 ஆகும் என்பதுடன் ஆ01இ ஆ02 மற்றும் ஆ03 ஆகிய பாடநெறிகள் தொடர்பாக ஒவ்வொரு அணி தொடர்பாகவும் காணப்படவேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை 04 ஆகும். ஏனைய பாடநெறிகள் தொடர்பாக அணியொன்றில் காணப்பட வேண்டிய பயிலுநர்களின் எண்ணிக்கை 08 ஆகும். இவ் அனைத்து பாடநெறிகளும் 80மூ செய்முறை பகுதிகளை உள்ளடக்கியதாக தயாரிக்கப்பட்டுள்ளதுடன் சிறு குழுக்களாக மாத்திரம் நடாத்தப்படுகின்றது. பாடநெறிகள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒட்டுமொத்த வருமானம் மூலம் பாடநெறிகள் தொடர்பாக ஏற்படும் செலவினங்களை ஈடுசெய்யும் வகையில் பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன.

(ஆ) தற்போது பாடநெறிகளின் நிமித்தம் மாணவர்களின் பங்குபற்றல் தொடர்பாக கூடுதல் கேள்வி நிலவுவதுடன் 2016 ஆம் ஆண்டில் மாணவர்களை 600 வரையில் அதிகரித்த போது 400 மாணவர்கள் தொடர்பாக காணப்பட்ட இட வசதியினை அப்படியே பயன்படுத்துவதற்கு நேரிட்டது. மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்புடையதாக அவர்களுக்கான கோட்பாட்டு மற்றும் செய்முறை பயிற்சிகளை வழங்குவதற்கு காணப்பட்ட இடவசதி போதாமையின் காரணமாக ஏற்பட்ட பிரச்சினைகளுக்கான தீர்வாக ஆரம்ப மட்ட சீ பிரிவாக புதிய கட்டிடமொன்றினை கட்டுவதற்கு அவசிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கு மேலதிகமாக இப் பயிலுநர்கள் முதலாம் ஆண்டிலிருந்து இரண்டாம் மற்றும் மூன்றாம் வருடங்களில் உரிய பிரிவுகளிற்கு செல்லும் போது அவ்வவ் பிரிவுகளின் இட வசதிகள் மேம்படுத்தப்படல் வேண்டும். அதற்கிணங்க, தற்போது இயந்திர, வெல்டிங் மற்றும் வலு மின்னியல் பிரிவுகளில் உள்ள பகுதிகள் இரண்டு மாடிகளாக பிரித்து இடவசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ் வேலைத்திட்டம் தொடர்பான கோரிக்கைகளுக்கு அமைவாக உள்கட்டுமான வசதிகளை வழங்கும் பொருட்டு புதிய வேலைத்தளம், வகுப்பறைகள், ஆய்வுகூடங்கள் போன்றவற்றினை நிர்மாணிக்கும் நோக்கில் நிறுவகத்திற்கு அருகாமையிலுள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையிற்கு சொந்தமான 04 ஏக்கர் அளவான இடத்தினை நிறுவகத்தினால் பொறுப்பேற்பதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் சட்டரீதியான தடங்கல்கள் காரணமாக இச் செயற்பாடு காலதாமதமாகியுள்ளது.

(இ) முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இல 30 இற்கு இணங்க, நிறுவக ஊழியர்களை புதிய சம்பள முறைமையிற்கு உள்வாங்கி மீள்கட்டமைத்தல் தொடர்பாக பல வருடங்களாக கடுமையான ஊழியர் எதிர்ப்பு போராட்டங்கள் நடைபெற்றன. ஊழியர்களின் பிரச்சினைகளை தீர்க்கும் பொருட்டு நிறுவகத்தில் காணப்பட்ட பயிற்றுநர் குழாம், சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் அடங்கலாக அலுவலர்கள், தேசிய சம்பள ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவ சேவை திணைக்களம் ஆகியவற்றுடன் பலமுறை கலந்துரையாடி பலத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உள்வாங்குதல் காலதாமதமாகியதன் காரணமாக ஊழியர்களின் பதவியுயர்வுகளை வழங்கமுடியாமை, அதிகரிக்கும் சம்பள படிநிலையினை வழங்கமுடியாமை, வினைத்திறன்காண் பரீட்சைகளை நடாத்தமுடியாமை போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டமையினால் ஊழியர்களின் அமைதியின்மை மேலும் அதிகரித்தது. பின்னர், நிறுவகத்தில் செயற்பட்டுவரும் அனைத்து தொழிற்சங்கங்கள் மற்றும் உயர் முகாமைத்துவ அலுவலர்களைக் கொண்ட குழு ஆகியன தேசிய சம்பள ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவ சேவை திணைக்களம் ஆகியவற்றுடன் நடாத்திய கலந்துரையாடல்களின் வழங்கப்பட்ட ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் ஆகியவற்றிற்கிணங்க ஊழியர்களின் சிரேஸ்ட நிலைகளிற்கு பங்கம் ஏற்படாத வகையில் உழைத்துக்கொண்ட சம்பள அதிகரிப்பிற்கு இணங்க உள்வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந் நிறுவகத்தின் அலுவலர்கள் தொடர்பாக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தொழிற்சந்தைகளில் நிலவும் கேள்விகளுக்கு இணங்க குறைந்த சம்பள படிநிலைகளில் அவர்களை நிலைநிறுத்தல் மிகவும் சவாலானதாக விளங்குகின்றது. சம்பள அதிகரிப்பு முறைமையினை மீளாய்விற்கு உட்படுத்துமாறு மேலதிக செயலாளர் அவர்கள் இது தொடர்பாக அழுத்தத்தினை வழங்கியுள்ளார். அவ்வாறே, பாராளுமன்ற பொது வியாபாரம் பற்றிய செயற்குழு சம்பந்தப்பட்ட அமைச்சின் தலையீட்டுடன் தேசிய சம்பள ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவ சேவை திணைக்களம் ஆகியவற்றுடன் கலந்துரையாடி இந் நிறுவகத்திற்கு ஏற்புடைய விசேட சம்பள முறையொன்றிற்கான அனுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கான அவசிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளது. அதற்கிணங்க, சம்பந்தப்பட்ட அமைச்சினால் முகாமைத்துவ சேவை திணைக்களத்திடம் இது தொடர்பாக கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

(ஈ) துறைசார் திறன்கள் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் பயிற்றுநர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்கும் போது 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தொடக்கம் ஏப்ரல் மாதம் வரையிலான காலப்பகுதியில் ஏற்பட்ட காலதாமதங்களை சரிசெய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(உ) இடத்தின் உரிமையினை மாற்றியமைக்கும் நிகழ்வானது அமைச்சின் மட்டத்தில் இடம்பெறும் செயற்பாடு என்பதனால் அதற்கிணங்க செயற்பட்டு திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் பதில் செயலாளர் மூலம் கட்டிட அனுமதியின் பொருட்டு கோரிக்கையினை முன்வைப்பதற்கு காணியின் சட்டபூர்வ உரிமையினை காட்டும் உறுதியானது அவசியம் என்பதனால் காணியின் உரிமையினை விரைவாக இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்திடம் கையளிப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு 2016.10.31 ஆம் திகதிய 4-1-9.∴1 ஆம் இலக்க கடிதம் மூலம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. தற்போது கட்டிடத்திற்கான அனுமதியானது கிடைக்கப்பெற்றுள்ளது.

மீண்டும் பணிப்பாளர் - அதிபர் மூலம் இக் காணியின் உரிமையினை தெளிவுபடுத்தி எமது நிறுவகத்திடம் விரைவில் உரிமையினை கையளிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சின் செயலாளருக்கு இல ல.ச.கா.அ.ஃ.∴னுஊநு(று).∴28.∴னீ.∴2018 மற்றும் 2018.11.23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ஊ) பணிப்பாளர் - அதிபர், பிரதி பணிப்பாளர் - பிரதி அதிபர், தலைமை பொறியியலாளர் - பயிற்சி, செயலாளர் ஆகிய பதவி வெற்றிட எண்ணிக்கை 04 ஆகும்.

பணிப்பாளர் - அதிபர் பதவியிற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு பல தடவைகள் விண்ணப்பங்களை கோரிய போதிலும் குறித்த தகைமைகளுடன் கூடிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாமையின் காரணமாக இவ் ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள முடியாமற் போயுள்ளது.

பணிப்பாளர் - அதிபர் பதவியிற்கு நிரந்தர நியமனத்தினை மேற்கொள்ளும் வரையில் இப் பதவியின் செயற்பாடுகளை மேற்கொள்ளும் முகமாக நிர்வாகக் குழுவின் மூலம் குழுவின் உறுப்பினர் ஒருவர் 2020.02.18 ஆம் திகதியன்று நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதி பணிப்பாளர் - பிரதி அதிபர் பதவியின் கடமைகளை தற்காலிக அடிப்படையில் மேற்கொள்வதற்காக தலைமை பொறியியலாளர் - உற்பத்தி சேவை மற்றும் பராமரிப்பு பதவியினை வகிக்கும் அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

செயலாளர் பதவியின் கடமைகளை தற்காலிக அடிப்படையில் மேற்கொள்ளும் வகையில் உதவி செயலாளர் பதவியினை வகிக்கும் அலுவலர் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

இப் பதவிகள் தொடர்பாக ஆட்சேர்ப்பு செய்தல் தொடர்பாக நிலவும் பிரச்சினைகளை தீர்க்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட அமைச்சின் மேலதிக செயலாளர் (நிர்வாகம்) அவர்களுடன் முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடியுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் மேலதிக செயலாளர் (மனிதவள) மூலம் முகாமைத்துவ சேவை திணைக்களத்திடம் கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

வெற்றிடங்கள் நிலவும் ஏனைய பதவிகளில் 17 வெற்றிடங்கள் தொடர்பாக 2021.10.01 ஆம் திகதியிலிருந்து ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட அமைச்சின் மேலதிக செயலாளர் (நிர்வாகம்) அவர்களின் யுனுஆ.˙. 11-01.˙.14 மற்றும் 2021.12.02 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அமைச்சரவை அலுவலகத்தின் இல 13.˙.304.˙.1695.˙.21 மற்றும் 2021.08.31 ஆம் திகதிய அரச செலவின மீளாய்வு தொடர்பான அமைச்சரவையின் தீர்மானத்திற்கு இணங்க ஆட்சேர்ப்பு தொடர்பாக அடிப்படையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதுவரையில் ஆட்சேர்ப்பு செய்யப்படாத பதவிகள் தொடர்பாக ஆட்சேர்ப்புகளை காலம் தாழ்த்துமாறு மேற்கொள்ளப்பட்ட அறிவிப்புக்கு இணங்க வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புகள் கால நீடிப்பு செய்யப்பட்டுள்ளன.

(எ) இணைப்பு 01 – தரமான கல்வி

எமது நிறுவகத்தின் மூலம் 11 முழுநேர பாடநெறிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்காக மாணவர்கள் அவர்களின் விருப்புகள் மற்றும் முதலாம் வருட நிறைவில் நடாத்தப்படும் பரீட்சையில் அவர்கள் பெற்றுக்கொள்ளும் புள்ளிகள் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வுசெய்யப்படுகின்றனர். மாணவர்கள் வார நாட்கள் 5 இல் நான்கு நாட்கள் செய்முறைப் பயிற்சிகளில் ஈடுபடுவதுடன் எஞ்சிய நாள் கோட்பாட்டு ரீதியிலான பயிற்சியில் ஈடுபடுவர். இதனை சதவீதங்களில் காட்டுவதாயின் செய்முறைப் பயிற்சிகள் 80மூ ஆகவும் கோட்பாட்டு ரீதியிலான பயிற்சிகள் 20மூ ஆகவும் காணப்படும்.

இவ் ஆரம்ப பயிற்சிக் காலப்பகுதியில் பயிலுநர்களுக்கு அனைத்து தொழில்கள் தொடர்பாகவும் அவசிய பிரிவுகள் பற்றிய குறுகியகால கல்வியும் தொழிற்சாலை ஒன்றில் பாதுகாப்பு உபகரணங்கள் பற்றியும் முறைசார் பயிற்சியினை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பயிலுநர்கள் மேற்கொள்ளும் செய்முறைப் பயிற்சிகள் தொடர்பாக கிழமைக்கொருமுறை கிழமை அறிக்கையினை (றுநநமடல சுநிழசவ) எழுத வேண்டும் என்பதுடன் சில செயன்முறை செயற்பாடுகள் தொடர்பாக உரிய திட்ட அறிக்கைகளை (சழதநஉவ சுநிழசவ) தயாரித்தல் அவசியமாகும்.

போதனாசிரியர்களில் 99மூ இனர் இந் நிறுவகத்தில் கல்வியினைப் பயின்றவர்கள் என்பதனால் அவர்களிடத்தில் காணப்படும் சிறந்த செய்முறை மற்றும் கோட்பாட்டு ரீதியிலான அறிவு மாணவர்களின் திறன் விருத்திக்கு நேரடி பங்களிப்பினை வழங்குகின்றது. போதனாசிரியர்களில் அதிகமான இளம் ஆசிரியர்கள் மேலதிக கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளதுடன் அது பயிலுநர்களிற்கு நன்மையளிக்கும் வகையில் அமையும். இங்கு போதனாசிரியர்களில் அதிகமானோர் வெளிநாட்டு புலமைப்பரிசில், வெளிநாட்டு தொழில்வாய்ப்புகளில் ஈடுபடல் மற்றும் இந் நாட்டிலுள்ள முன்னிலை நிறுவகங்களில் பயிற்சிகளை பெற்றிருத்தல் போன்றவை மூலம் தமது அறிவு மற்றும் திறன்களை வளர்த்துக்கொண்ட பிரிவினர் என்பதனால் இதன் நன்மைகள் பயிலுநர்களுக்கு கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. பயிலுநர்களின் அறிவினை பரீட்சிப்பதற்கு இடையிடையே பரீட்சைகள் நடாத்தப்படுவதுடன் அக் கால எல்லைகள் பிரிவு மட்டங்கள் தொடர்பாக வேறுபடக்கூடும். மேலும் கோவிட் தொற்று காரணமாக மாணவர்களை நிறுவகத்திற்கு அழைக்கமுடியவில்லை என்பதுடன் அக் காலப்பகுதியில் ஒன்லைன் முறையின் மூலம் மாணவர்களிற்கு அறிவினை வழங்கி அவர்களை நிறுவகத்துடன் தொடர்பில் பேணுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நவீன தொழில்நுட்பத்தினூடாக மாணவர்களிற்கான கற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், அலுவலர்கள் மற்றும் பயிற்சிகளை நிறைவு செய்த பயிலுநர்கள் ஆகியோருக்கு ஏஞ மட்டம் 5 பாடநெறிகள் அதன் பின்னர் டிப்ளோமா மற்றும் பட்டப்படிப்பு மற்றும் பட்டப்பின் படிப்பு வரையில் கற்பதற்கு அவசிய காலம் மற்றும் அறிவுகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இணைப்பு 02 – சிறந்த செயற்பாடுகள் மற்றும் பொருளாதார வளர்ச்சி

எமது நிறுவகத்தில் பயிற்சியினைப் பெறும் பயிலுநர்களின் பங்களிப்பின் கீழ் பல சமூக நலன்புரி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. எமது நிறுவகத்திற்கு அண்மையிலுள்ள மொரட்டுவ சொய்ஸாராமயில் மேற்கொள்ளப்படும் புண்ணியோற்சவம் போன்றன தொடர்பாக அவசிய பங்குபற்றல்கள் மற்றும் விகாரையில் மேற்கொள்ளப்படும் சுத்த பவித்திர செயற்பாடுகள் தொடர்பாக அவசிய உடல் உழைப்பு பங்களிப்புகளை வழங்குதல் எமது நிறுவகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

வருடத்திற்கொருமுறை அல்லது இருமுறை அரச முன்பள்ளியிலுள்ள (லுனாவ அல்லது களுபோவில) கட்டில், சக்கர நாற்காலி போன்ற உபகரணங்களை கொண்டுவந்து பழுதுபார்த்தல் எமது நிறுவகத்தினால் மேற்கொள்ளப்படும் சமூக நலன்புரிச் செயற்பாடாகும்.

அவ்வாறே, அவுஸ்ரேலியா மாணவ சங்கத்தின் பங்களிப்புடன் மிகவும் குறைந்த வசதிகளுடன் கூடிய கிராமங்களில் வாழும் குடும்பங்களுக்கு வீடுகள் மற்றும் வைத்தியசாலைகள் போன்றன நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறான செயற்பாடுகளில் உடலுழைப்பு பங்களிப்புகளை வழங்குதல் எமது பயிலுநர்கள் மூலம் மிகவும் அர்ப்பணிப்புடன் வழங்கப்பட்டுள்ளன. சுனாமி தாக்கத்தின் போது பாதிக்கப்பட்ட வீடுகளை மீள் நிர்மாணம் செய்யும் செயற்பாடுகளில் வீடுகளில் மின் மற்றும் நீர்க் குழாய் பொருத்துதல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு உதவியளிக்கப்பட்டுள்ளது. மேலும், ஏனைய அரச மற்றும் தனியார் நிறுவகங்களின் வாகனங்கள் எமது நிறுவகத்தில் பழுதுபார்த்துக்கொள்ள முடியும். இதன் மூலம் பயிலுநர்களின் செய்முறை அறிவு மேம்படுதல் இடம்பெறுவதோடு நிறுவகத்திற்கு வருமானமும் கிடைக்கப்பெறுகின்றது.

ஒவ்வொரு வருடத்திலும் நிறுவகத்தின் மூலம் பல மதச் செயற்பாடுகள் நடாத்தப்படுகின்றன. பௌத்த துறவிகளின் வருடாந்த புண்ணியோற்சவம், இந்து அடியார்களினால் கொண்டாடப்படும் சரஸ்வதி பூஜை, இஸ்லாம் மதத்தினரால் கொண்டாடப்படும் ரம்ழான் நோன்பு மற்றும் வருட இறுதியில் கிறிஸ்தவ மதத்தினரால் கொண்டாடப்படும் நத்தார் உற்சவம் போன்றன கொண்டாடப்படுகின்றன. இவ் அனைத்து மத உற்சவங்களில் அனைவரும் இன மத பேதமின்ற நிறுவகத்தின் பொது செயற்பாடாக கருதி பங்களிப்புகளை வழங்குதல் மற்றும் பங்குபற்றுதல் விசேடத்துவமானது என்பதனைக் குறிப்பிடல் வேண்டும்.

சிங்கள மற்றும் இந்து புதுவருடத்தினை முன்னிட்டு ஏப்ரல் மாதத்தில் நடாத்தப்படும் புதுவருட கொண்டாட்டத்தில் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியுடன் பங்குபற்றும் கலாச்சார சந்தர்ப்பமொன்றாகும். ஒவ்வொரு வருடமும் முதலாம் அல்லது இரண்டாம் நிறுவக தவணைகளில் பிரிவுகளிடையிலான கிறிக்கெட், கால்ப்பந்து, கைப்பந்து போட்டித் தொடரினை நடாத்துதல் பயிலுநர்களின் விளையாட்டு திறன், ஒற்றுமை மற்றும் சகிப்புத்தன்மை போன்றவற்றின் வளர்ச்சிக்கு மிகுந்த அடித்தளமாக விளங்குகின்றது. அதற்கு மேலதிகமாக இரண்டு வருடங்களிற்கு மாத்திரம் ஒருமுறை உள்ளக விளையாட்டு நிகழ்ச்சியினை நடாத்துவது பயிலுநர்களின் பொருட்டு மேற்கொள்ளப்படும் மிகவும் பெறுமதிமிக்க செயற்பாடாகும்.

அவ்வாறே, அனைத்து பிரிவுகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் கிழமையிற்கு ஒரு நாள் காலை 07.30 – 09.00 இடையிலான காலப்பகுதியில் விளையாடுவதற்கு அனைத்து பயிலுநர்களிற்கும் சந்தரப்பம் அளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொருத்தமாக பராமரிக்கப்பட்டுவரும் விளையாட்டு மைதானமும் உடற்பயிற்சி மத்தியநிலையமும் எம்மிடத்தில் காணப்படுகின்றது.

நிறுவகத்திடம் வாத்தியக்குழு ஒன்றும் மேல்நாட்டு சங்கீத குழு காணப்படுகின்றது என்பதனை குறிப்பிடுதல் வேண்டும். அவ்வாறே, நிறுவகத்தின் தேவைகளிற்கு இணங்க அவ்வப்போது நடாத்தப்படும் கலாச்சார கண்காட்சி மற்றும் விழாக்கள் போன்றவற்றில் திறமைமிக்க பயிலுநர்கள் பாடல், வாசித்தல், நடிப்பு, அறிவிப்பு செய்தல் போன்ற பல்வேறுபட்ட துறைகள் ஊடாக தமது திறமைகளை வெளிப்படுத்துவதற்கு சந்தரப்பங்கள் அளிக்கப்படுகின்றன. இச் செயற்பாடுகள் தொடர்பாக வெளிவாரி இசை பயிற்றுநர் ஒருவரின் உதவியானது பெறப்படுகின்றது. இங்கு மாணவர்களின் சமத்துவம் மற்றும் தொடர்புபடல் போன்றவை அதிகரிக்கின்றன.

இணைப்பு 05 பால் சமத்துவத்தினை உறுதி செய்தல் மற்றும் அனைத்து பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளை வலுப்படுத்துதல்

எட்டுவதற்கான இலக்குகளாக 5ய தேசிய சட்ட ஒழுங்குகளுக்கு அமைவாக பெண்களுக்கான பொருளாதார வளங்கள் தொடர்பாக சமமான சந்தர்ப்பங்களை அளித்தல். இ.ஜே.தொ.ப.நிறுவகத்தின் பாடநெறிகள் தொடர்பாக பெண்.ஃ ஆண் ஆகிய இரு பாலர் தொடர்பாக பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும் 2016 ஆம் ஆண்டில் பெண் பயிலுநர்கள் பாடநெறிகள் தொடர்பாக இணைதல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. வருடத்திற்கு இரண்டு பேர் அல்லது மூன்று பேர் வரையில் (அதனால் பெண் பயிலுநர்களிற்குப் பயிற்சியளிக்கும் செயற்பாடு தொடர்பாக சமமான சந்தர்ப்பத்தினை அளிக்கும் பொருட்டு பெண் கூடுதல் எண்ணிக்கையான பெண் பயிலுநர்களை) ஆட்சேர்ப்பு செய்வது அவசிய இலக்காகக் காணப்பட்டது.

- பிரச்சார செயற்பாடுகளில் பெண் பயிலுநர்களை அதிகரித்தல் தொடர்பாக முன்னுரிமைகளை அளித்தல்.
- நிறுவகத்திற்கு பயிலுநர்களை ஆட்சேர்ப்பு செய்யும் நேர்முகத்தேர்வுகளில் பெண் பயிலுநர்களிற்கு விசேட சந்தர்ப்பங்களை அளித்தல்
- பெண் பயிலுநர்களின் பொருட்டு புதிய பாடநெறிகளை உருவாக்குவதற்குத் திட்டமிடல்
- பெண் பயிலுநர்களிற்கான வசதிகள் தொடர்பாக ரூபா 13.00 மில்லியன்கள் வரையிலான செலவினத்தில் கட்டிடமொன்றினை புனரமைத்தல்

முன்னேற்றம்

2020 ஆம் ஆண்டு தொடர்பாக உள்வாங்கப்பட்ட பெண் பயிலுநர்களின் எண்ணிக்கை 25 ஆகும்.

(ஏ) முன்வைக்கப்பட்டுள்ள கணக்காய்வு விசாரணை தொடர்பாக பதிலளிக்கப்பட்டுள்ளதுடன் உள்ளக கணக்காய்வு விசாரணை தொடர்பாக காலதாமதமின்றி பதிலினை வழங்குவதற்கு உரிய அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(ஐ) 2016 மற்றும் 2017 வருடாந்த அறிக்கைகளை தயாரித்து அமைச்சரவையின் அனுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஒ) இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்களில் பேரூந்துகளை பழுதுபார்த்தல் தொடர்பாக கிடைக்கப்பெறவேண்டிய பண மீதியில் கடன் மீதியானது உருவாகியுள்ளது. இந் நிறுவகம் இலங்கை போக்குவரத்து சபையின் கீழ் காணப்பட்ட காலப்பகுதியிலிருந்து கிடைக்கப்பெறவேண்டிய கடன் மீதிகளினால் இப் பெறுமதியானது உருவாகியுள்ளது. எம்மால் உரிய டிப்போவிற்கு கடனினை அறவிடும் பொருட்டு கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும் அது தொடர்பாக பதிலானது கிடைக்கப்பெறவில்லை. அந்த டிப்போவில் இந்த கடன் மீதி தொடர்பான தகவல்கள் காணப்படாமை இதற்கான காரணமாகும். இது தொடர்பாக அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் போக்குவரத்து சபையுடன் கலந்துரையாடி தீர்ப்பதற்கான அவசிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஓ) உதிரிப் பாக தொகையில் காணப்படும் தேவையற்ற பாகங்களை அடையாளங்கண்டு அவற்றினை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கிணங்க, அகற்றப்படவேண்டிய உதிரிப் பாகங்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் அப் பாகங்களை அகற்றுவதனை உறுதி செய்யும் குழு உறுதி செய்யப்பட்டுள்ளது. இச் செயற்பாட்டின் மிகுதி நடவடிக்கைகள் குறுகிய காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்படும்.

(ஔ) நீண்ட காலமாக நிறுவகத்தினால் நுகரப்பட்டுவரும் காணி மற்றும் கட்டிடங்கள் ஆகியவற்றின் உரிமைகளை சரியான முறையில் நிறுவகத்திடம் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை ஒன்று அமைச்சின் செயலாளர் அவர்களுக்கு 2019.05.09 ஆம் திகதியன்று (இணைப்பு 06) முன்வைக்கப்பட்டதுடன் அதற்கிணங்க காணியின் உரிமையினைப் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அமைச்சின் செயலாளரினால் காணி ஆணையாளருக்கு 2019.08.05 ஆம் திகதியன்று கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இக் காணி தொடர்பான தற்போதைய நுகர்வினைப் பரீட்சித்துப் பார்த்து விபரமான அறிக்கையினை வழங்குமாறு காணி ஆணையாளர் மூலம் பிரதேச செயலாளர் 2020.02.17 ஆம் திகதி பணிக்கப்பட்டுள்ளார். பிரதேச செயலாளர் மூலம் இக் காணி தொடர்பாக இலங்கை போக்குவரத்து சபையின் உரிமை தொடர்பான தகவல்கள் மற்றும் இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகத்திடம் எவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளது என்பன தொடர்பாக தகவல்களை பிரதேச செயலாளரிடம் தெரிவிக்குமாறு குறிப்பிட்டு செயலாளர் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு, காணி ஆணையாளர் நாயகம் மற்றும் எனக்கு பிரதியிடப்பட்ட கடிதமொன்று இலங்கை போக்குவரத்து சபையின் தலைவருக்கு 2020.02.18 ஆம் திகதியன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இக் காணியினை நிறுவகத்திடம் ஒப்படைக்கும் செயற்பாடு இடம்பெற்றுவருகின்றது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

உப்பாலி ரணசிங்க

பணிப்பாளர் - அதிபர்

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்